**செய்தி வெளியீடு எண்:414** **நாள்:09.07.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

# <u>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவராகக் குறிஞ்சி திரு.என். சிவகுமார் அவர்கள் பொறுப்பேற்றார்.</u>

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 04.10.2007 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் உள்ள கேபிள் டிவி ஆப்பரேட்டர்களின் வாழ்வாதாரத்திற்காகவும், நிறைந்த சேவையைக் குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நிறுவனம் அரசின் பல்வேறு சேவைகளை எளிய முறையில் பொதுமக்கள் பெற்றிட அரசு இ-சேவை மையங்களை நிறுவி அதன் மூலம் இணையச் சேவைகளையும் வழங்கி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 12.03.2021 முதல் காலியாக உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர் பதவிக்குக் குறிஞ்சி திரு. என். சிவகுமார் அவர்களை நியமித்து 06.07.2021 அன்று ஆணையிட்டார்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள குறிஞ்சி திரு. என். சிவகுமார் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களையும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த.மனோ தங்கராஜ் அவர்களையும் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

அதனைத் தொடர்ந்து, சென்னை எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவராகக் குறிஞ்சி திரு. என்.சிவகுமார் அவர்கள் இன்று காலை (09.07.2021) பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மேலாண்மை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப. அவர்கள், நிறுவனத்தின் பொது மேலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9